தினகரன்
புதுச்சேரி 13 ஜூலை 2012

# பிரெஞ்சு தூதரகத்தில் விருது வழங்கும் விழா

புதுச்சேரி, ஜூலை 13: இந்தியாவுக்கான பிரெஞ்சு தூதர் பிரான்சிஸ் ரிச்சர் 4 நாள் பயணமாக நேற்று முன்தினம் புதுவை வந்தார். அன்றிரவு கவர்னர் இக்பால்சிங்கை மரியாதை நிமித்தமாக சந்தித்தார். தொடர்ந்து நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

இந்நிலையில் நேற்று மாலை, புதுவை கடற்கரை சாலையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தில் நடந்த விருது வழங்கும் விழாவில் பிரான்சிஸ் ரிச்சர் பங்கேற்றார். இவ்விழாவில் பேராசிரியர் என்எஸ் ராமானுஜ தாத்தாச்சாரியாவுக்கு பிரான்சு அரசு சார்பில் செவாலியே தெலா லெஜியன் தான்னர் விருதை தூதர் பிரான்சிஸ் வழங்கி கவுரவித்தார்.

பேராசிரியர் தாத்தாச்சாரியாவின் சமஸ்கிருத பணிகளை பாராட்டி பிரான்சு அரசு இவ்விருதை வழங்கியுள்ளது. விருது பெற்ற தாத்தாச்சாரியாவின் சொந்த ஊர் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தாலுகாவிலுள்ள நாவல்பாக்கம் கிராமம் ஆகும்.

இவர் கடந்த 1994 முதல் புதுவை பிரெஞ்சு இன்ஸ்டிடியூட்டில் கவுரவ் விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார். மேலும் 1968 முதல் 1994 வரை திருப்பதி கேந்திரிய சமஸ்கிருத வித்யா பீடத்தில் விரிவுரையாளர் உள்பட பல்வேறு பதவிகளில் இருந்து அக்கல்வி நிறுவனத்தில் முதல் துணைவேந்தராகவும் பணியாற்றியவர்.

விருது வழங்கும் விழாவில், இந்தியாவுக்கான துணை தூதர் பியூர் பொர்னியே உள்பட பலர் கலந்துகொண்டனர்.

Dinakaran 13/07/2012 Page 4

## AWARD CEREMONY AT THE FRENCH CONSULATE

The French Ambassador to India Mr François Richier was on a 4-day official visit to Pondicherry. He reached here last evening and called on the Lieutenant Governor. Last evening in a function organised at the French Consulate, he delivered the Chevalier Award on the renowned Sanskrit scholar, Mr Ramanuja Tatachariyar. Appreciating his service to the Sanskrit language the award was given to him. He is from Navakpakkam in Thiruvannamalai District. He has been working in the French Institute since 1994. He had earlier had a long tenure at the Kendriya Sanskrit Peeth at Thirupathi